ISSN 2320 - 4842 (P)

# பழந்தமிழரின் மருத்துவச் சிந்தனைகள்

**முனைவர் சு. சதாசிவம்**

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,

சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி),

தாம்பரம், சென்னை 600 059.

## ஆய்வுச் சுருக்கம்

மருத்துவ உலகம் இன்று நம்மைத் தனது கட்டுக்குள் வைத்திருக்கிறது. அல்லது நாம் அதன் கட்டுக்குள் இருக்கிறோம் என்றும் கூறலாம். உடல் இயக்கத்தில் சிறு மாற்றம் என்றாலும், உடனே மருத்துவரை அணுகி, வைத்தியம் பார்க்கும் வழக்கம் இன்று நம்மிடையே அதிகம் காணப்படுகிறது. இன்று தெருவெங்கும் மருத்துவமனைகளும், மருந்து கடைகளும் பெருகிவிட்டன. நோயாளிகளின் கூட்டம் ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் சந்தைக் கூட்டம் போல் பெருகி நிற்கிறது. இல்லங்கள் தோறும் சமையல் பண்டங்களைப் போல் மருந்து, மாத்திரைகள் இருப்பு இல்லாமலில்லை. மருத்துவமனைகள், மருந்துகளின் விளம்பரங்கள் எங்கு பார்த்தாலும் நம் கண்ணில் படாமலில்லை.

அச்சுறுத்தும் நோய்களின் ஆக்கிரமிப்புகளால், நடைமுறைச் சமூகம் தள்ளாடுகிறது. இதிலிருந்து நாம் விடுபட நினைத்தாலும், முடியாமல் தவிக்கும் நிலை. இத்தகைய நடைமுறை வாழ்வியலில் இருந்து பழந்தமிழ்ச் சமூகம் எவ்வாறு மாறுபட்டிருந்தது என்பதை அறியும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு அறிமுகம்

பழந்தமிழ் இலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகள் சார்ந்த பாக்களையும், அதன்படி அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் போக்குகளையும் நமக்கு எடுத்தியம்புகின்றன. பழந்தமிழகத்தில் மக்களிடம் காணப்படும் பழக்க வழக்கங்களில் ஒன்று மருத்துவம். மருத்துவன் என்றால் ‘அறவோன்’ எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அறம் சார்ந்த முறையில் நோயாளிகளின் நோயினைப் போக்க, மருத்துவர்கள் துணை செய்தல் வேண்டும் என்பதே பழந்தமிழரின் நோக்கமாக இருக்கப்பெற்றது.

வணிக நிலையிலான மருத்துவம் அன்றைய காலத்தில் இருக்கவில்லை என்பதை, பழந்தமிழ்ப் பாக்கள் நமக்குச் சான்றளிக்கின்றன. ‘உணவே மருந்து’ எனும் அடிப்படையிலேயே நம் முன்னோர்களது வாழ்க்கை இருக்கப்பெற்றது என்பதில் ஐயமில்லை. சங்கப் பாடல்களிலும், திருக்குறளிலும் இடம்பெற்றுள்ள மருத்துவக் குறிப்புகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

### மருத்துவனும் மருந்தும்

உடலின் இயக்கங்களையும், அதன் இயல்புகளையும், மாறுபடும் தன்மைக ளையும் ஆராய்ந்து, நோயுற்றோரின் நிலை அறிந்து, நோய் நீங்கும் வகையில் மருந்து வழங்குபவரே சிறந்த மருத்துவ ராவார். நோயாளியின் விருப்பம் இங்கு முக்கியமானதல்ல. நோயின் தீவிரமே இங்கு முதன்மையானது. இதனை,

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது

மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல" (நற்.136 : 2—3)

என்று வரும் நற்றிணைப் பாடலடிகளால் அறிய முடிகிறது.

சிறந்த மருத்துவன் தன்னிடம் வரும் நோயாளியின் நிலைமையையும், அவன் உற்றிருக்கும் நோயின் அளவையும், காலத்தையும் அறிந்து செயலாற்ற வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதனை,

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதச் செயல்" (குறள்.943)

என்னும் குறள் எடுத்தியம்புகிறது.

நமது உணவு முறையையும், தின ஒழுக்கமும் சிறப்புடையதாக இருப்பின், உடலுக்கு நோயின் வருகை இராது என்பதும் வள்ளுவர் கூற்றாக அமைகிறது. நோயினை மருந்து கொடுத்து நீக்குபவரை மருத்துவன் அல்லது அறவோன் என்கிறோம்.

இந்த உடலுக்கு மருந்தே அவசியம் இல்லை என்று கூறும் துணிவும், தெளிவும் வள்ளுவருக்கு இருப்பதை,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய

தற்றது போற்றி உணின் " (குறள்.942)

என்னும் குறள் நமக்கு உணர்த்துகிறது.

நடைமுறை வாழ்வில் நாம் செயற்கை மருந்துகளால் விரைந்து உடல் நோயைப் போக்கும் முறையைப் பின்பற்றி வருகின்றோம். அறிவியல் மருத்துவத்தை ஒப்பிடுகையில், மரபு வழி மருத்துவம் என்பது குறைந்த அளவே நடைமுறை யில் இருப்பதை அறிய முடிகிறது. மரபு வழி மருத்துவத்தை நாடுவோர் குறை வான எண்ணிக்கையிலேயே காணப் படுகின்றனர்.

செடி, கொடி, பூ, வேர், பட்டைகள் எனத் தாவரத்தின் வழி மருந்து தயாரித்து, நோயற்றோருக்கு வழங்கும் முறையே மரபு வழி மருத்துவமாகும். ஈகை மனம் கொண்ட ஒருவனிடம் இருக்கும் செல்வமானது, மருத்துவத்திற்குப் பயன்படும் மரம் எத்தகைய நன்மையுடையதோ, அதுபோன்றதாகும் என்பதை வள்ளுவர்,

"மருந்தாக்கித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகை யான்கண் படின்" (குறள்.217)

என்ற குறட்பாவின் வழி எடுத்துரைக் கின்றார்.

### பழந்தமிழர் மருத்துவம்

வயிற்றுப் பசியையும் நோய் என்றே இலக்கியங்களில் பதிவுச் செய்யப் படுகிறது. "என் நோய் அறியா இடும்பைக்கூர் என் வயிறே" என்று பிற்கால அவ்வையார் பாடலொன்றில் குறிப்பிடுகிறார். மானம், குலம், கல்வி,

தானம், தவம் உள்ளிட்ட பத்தும், பசி வந்திட பறந்து போகும் என்பதும் அவ்வை கூற்றாகும். 'உயிர்களின் பசியினைப் போக்குவதே ஜீவகாருண்ய மாகும்' என்பது வள்ளலார் பார்வை. சங்ககால மன்னர்கள் பலரும் தம்மை நாடிவரும் இரவலர்களுக்கு உணவளித்து, உபசரிக்கும் போக்கினை உடையவர் களாகக் காணமுடிகிறது. இதனை,

**"பசிப்பிணி மருத்துவ னில்லம்**

**அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே"** (புறம்.173 : 11—12)

என்னும் புறப் பாடலடிகளால் அறியலாம். பசியின் துன்பத்தைப் போக்குவோரை 'பசிப்பிணி மருத்துவன்' என்று அழைக்கும் வழக்கம் இருக்கப் பெற்றதைப் புறநானூறு சுட்டுகிறது.

மருந்துக்கும், மருத்துவத்துக்கும் கட்டுப்படாத நோய்கள் இன்றளவும் இருந்து வருகின்றன. ஒரு காலத்தில் அச்சுறுத்திய நோய்கள் பல, இன்று மருத்துவத்திற்கும், மருந்திற்கும் கட்டுப்படுகின்றன. சில நோய்கள் மனித உடலுக்குள் தீராத வலி, வேதனைகளை உண்டு பண்ணுகின்றன. சில நோய்கள் இயக்கத்தைத் தடைப்படுத்தாமல் அவ்வப்போது சில இடையூறுகளோடு நமக்குள் உடன் பயணிக்கின்றன.

உயர்திணை, அஃறினை ஆகிய அனைத்து உயிர்களுக்கும் வடிவத்தில், அளவில் வேறுபட்டாலும், நோய் என்பது பொதுவானதாகவே இருந்து வருகிறது. நெடுங்காலம் நோயின் பிடியில் சிக்கித் தவித்த ஒருவருக்கு, சிறந்த மருத்துவத்தால் நோய் குணமாகு மாயின் மனம் களிப்படையும். வாழ வேண்டும் என்கின்ற வேட்கை அதிகரிக்கும். இதனை,

**"திருந்திய யாக்கையுண் மருத்துவனூட்டிய**

**மருந்துபோன் மருந்தாகி மனனுவப்ப"** (கலித்.17 : 19 — 20)

எனக் கலித்தொகை பாடலடிகள் சுட்டுகின்றன.

அறிவியல் மருத்துவத்தில் இன்று உடலில் ஒவ்வொரு உறுப்பிற்கும் தனித்தனி துறைகளை உருவாக்கி, மருத்துவம் பார்க்கின்ற நிலை இருந்து வருகின்றது. பழங்காலத்தில் இந்நிலைக் குறைவு. ஆனால் பக்க விளைவுகள் இல்லாத வகையில் மருத்துவமுறை இருக்கப்பெற்றது. இன்று ஒரு நோய்க்கு எடுத்துக் கொள்ளும் மருந்துகளால், இன்னொரு புதிய நோய் உடலை பாதிக்கும் நிலை இருந்து வருகிறது. சிறியவர் முதல் பெரியவர் வரை வயது வித்தியாசம் இன்றி பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு அவதியுறும் நிலை ஆங்காங்கே காணப்படுகின்றன.

உடலில் உண்டாகும் காயங்களுக் குத் தையல் போட்டு, பிளவுற்ற இடத்தை கூடவைக்கும் முறை அறிவியல் மருத்துவத்தில் கடைபிடிக்கப்படும் ஒன்று. அதேவேளை பசைகளைக் கொண்டு பிளவுற்ற சதைகளை ஒட்ட வைக்கும் முறையும் அறுவை சிகிச்சையில் பின்பற்றப்படுகிறது. இந்த இரண்டு வகையான மருத்துவ முறைகளும் பழந்தமிழர்களிடம் காணப்படுகின்றன. ஊசி கொண்டு தைத்த மருத்துவத்தை,

**"................ ...... ... ......... நெடுவள் ஊசி**

**நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்"**

(பதிற்று.42 : 3—4)

என்றும், அத்தி மரத்தின் பால் கொண்டு பிளவுற்ற தசையை ஒட்ட வைத்த முறையை,

"திரும்புசுவைக் கொண்ட
விழுப்புணோய்தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு
மயங்கி
வடவின்று வடிந்த யாக்கையன்"

(புறம்.180 : 4—6)

என்றும் வரும் பாடலடிகளால் அறியலாம். போர்களத்தில் விளக்கின் ஒளியில் மருத்துவம் பார்த்த நிலையை,

"மண்டுஅமர் அழுவத்து
எல்லிக்கொண்ட
புண்தேர் விளக்கின் தோன்றும்"

(அகம்.11 : 13—14)

என்றும், காயத்திற்குப் பஞ்சை வைத்து மருத்துவம் பார்த்த நிலையை,

"கதுவாய் போகிய நுதிவா யெஃகமொடு
பஞ்சியும் களையாப் புண்ணர்"

(புறம்.353 : 15 —16)

என்றும் வரும் பாடலடிகளால் அறியலாம்.

முடிவுரை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. உடல் நோய், செயல்கள் அனைத்தையும் பாதிக்கும். உடல் நோய் தீர்க்கும் மருத்துவர், கடவுளுக்கு ஒப்பானவர் களாகப் பார்க்கும் நிலை இன்றளவும் நீடிக்கிறது. பழந்தமிழர்களிடையே நிலவி வந்த மருத்துவ முறைகளில் இருந்து, இன்று மருத்துவ உலகம் அளப்பரிய சாதனைகளையும், விந்தைகளையும் நிகழ்த்தி வருகிறது. மனித உயிர்களோடு விளையாடும் மருத்துவ வணிகமும் இன்று ஆங்காங்கே காணப்படுகின்றது.

மருத்துவர் அறம் சார்ந்தவர் என்னும் நிலை என்றும் நீடிக்க வேண்டும். தன்னிடம் மருத்துவம் பார்க்க வரும் பலரை காப்பாற்றி விட்டதாக நினைக்கும் மருத்துவரையும், ஒரு நாள் யாராலும் காப்பாற்ற முடியாத நிலை வரும். பழந்தமிழர் மருத்துவத்தில் காணப்படும் அறம், இன்றைய மருத்துவ உலகிலும் நிலை பெற வேண்டும். மருந்து, மருத்துவர், மருத்துவம் எனும் அனைத்தும் நம்பிக்கைக்குறியதாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே நோய்கள் குணமாகும். ஆரோக்கியம் தளைக்கும்.

## குதிரைச் சிலை

இனி, குதிரைச் சிலையைக் கண்டால் இவற்றையும் கவனியுங்கள்:

குதிரையின் மேல் வீரர் அமர்ந்து இருக்கும் சிலைகளை நிறுவுவதில் ஒரு மரபு உள்ளது.

குதிரையின் நான்கு கால்களும் கீழே ஊன்றி இருந்தால், அந்த வீரன் இயற்கையாக மரணம் அடைந்தான் என்று பொருள்; குதிரையின் ஒரு கால் தூக்கிய நிலையில் இருந்தால், அந்த வீரன் போரில் காயமடைந்து, பிறகு இறந்தவன் என்று பொருள்; முன்னங்கால்கள் இரண்டும் தூக்கிய நிலையில் இருந்தால், அந்த வீரன் போரில் வீர மரணம் அடைந்தவன் என்று பொருள்.

- என். அருணாசலம்